# வைப்பாளர்கள்/கடன்பெறுநர்களுக்கான அறிவித்தல்

# த பினான்ஸ் கம்பனி பிஎல்சி

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 37(3)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய நிதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக த பினான்ஸ் கம்பனி பிஎல்சிக்கு வழங்கப்பட்ட உரிமம் 2020 மே 22ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, த பினான்ஸ் கம்பனி பிஎல்சியானது 2020 மே 22ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதி குத்தகைக்குவிடல் நிறுவனமொன்றாக பதிவுசெய்யப்பட்ட த பினான்ஸ் கம்பனி பிஎல்சியின் பதிவுச் சான்றிதழை இரத்துச்செய்யும் அறிவித்தல் 2020 மே 22ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை துணையளித்தல் திட்டமானது ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் ரூ.600,000/- வரை நட்டஈட்டினை கொடுப்பனவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும். நட்டஈடு கொடுப்பனவு தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். அனைத்து ஏனைய வைப்பாளர்களினதும் எஞ்சியிருக்கின்ற வைப்பு மீதி, கோரிக்கைகளின் முன்னுரிமைக்கு ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு தீர்த்துக்கட்டும் செயன்முறையின் போது அறவிடப்படலாம்.

த பினான்ஸ் கம்பனி பிஎல்சியிடமிருந்து கடன்கள் மற்றும் முற்பணங்களைப் பெற்றுக்கொண்ட அனைத்து வாடிக்கையாளர்களும் தமது உடன்படிக்கையிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக கம்பனிக்கான அவர்களது ஒப்பந்தக் கடப்பாடுகளை பின்வரும் வங்கிக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவு செய்யுமாறு வேண்டப்படுகின்றனர். பின்வரும் வங்கிக் கணக்குகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் வங்கி வைப்புப் படிவத்தின் தொடர்புடைய கூட்டினுள் தொடர்புடைய குத்தகை/ கடன்/ முற்பண வசதியின் ஒப்பந்த இலக்கத்தினை அல்லது வாடிக்கையாளரின் தொடர்பு விபரங்களை (தொலைபேசி இலக்கம்) குறிப்பிடுமாறும் அத்தகைய வாடிக்கையாளர்கள் கோரப்படுகின்றனர்.

| இல. | வங்கி /கிளை | வங்கிக் கணக்கு இல. |
|---|---|---|
| 1. | செலான் பாங்க் பிஎல்சி – மிலேனியம் கிளை | 086000040446 001 |
| 2. | மக்கள் வங்கி – மஜெஸ்ரிக் சிற்றி கிளை | 200100173225878 |
| 3. | இலங்கை வங்கி – பம்பலபிட்டி | 71601322 |
| 4. | கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் - அம்பலாந்தோட்டை | 1630055501 |
| 5. | செலான் பாங்க் பிஎல்சி – அம்பாறை | 091032472906 001 |
| 6. | செலான் பாங்க் பிஎல்சி – பதுளை | 0260 02610730 001 |
| 7. | கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் - சிலாபம் | 1430008741 |
| 8. | செலான் பாங்க் பிஎல்சி – காலி | 016032497408 001 |
| 9. | மக்கள் வங்கி – காலி | 1691 001 3 1871578 |
| 10. | செலான் பாங்க் பிஎல்சி – கம்பஹா | 0110 00200610 001 |
| 11. | செலான் பாங்க் பிஎல்சி – ஹொரண | 0230 00051113 001 |
| 12. | செலான் பாங்க் பிஎல்சி – மிலேனியம் - த பினான்ஸ் கம்பனி பிஎல்சி ஹைப்பாக் கிளை | 0860 00040896 001 |
| 13. | கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் - கொழும்பு 07 | 1500025423 |
| 14. | மக்கள் வங்கி – ஹைப்பாக் கோனர் | 025 1 001 4 0001539 |
| 15. | செலான் பாங்க் பிஎல்சி – ஜா-எல | 0270 00747331 001 |
| 16. | செலான் பாங்க் பிஎல்சி – யாழ்ப்பாணம் | 085 002034000 001 |
| 17. | செலான் பாங்க் பிஎல்சி – களுத்துறை | 0360 01201192 001 |
| 18. | கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் - கண்டி | 1000366203 |
| 19. | செலான் பாங்க் பிஎல்சி – கேகாலை | 0100 00052876 001 |
| 20. | செலான் பாங்க் பிஎல்சி – குளியாப்பிட்டி | 0440 01795138 001 |
| 21. | செலான் பாங்க் பிஎல்சி – மாத்தறை | 0020 32533170 001 |
| 22. | இலங்கை வங்கி – மாத்தறை | 0001661518 |
| 23. | கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் - மொரட்டுவ | 1590033460 |
| 24. | செலான் பாங்க் பிஎல்சி – நுகேகொட | 0120 00206557 001 |
| 25. | செலான் பாங்க் பிஎல்சி – நுவரெலியா | 0190 30375970 001 |
| 26. | மக்கள் வங்கி – நுவரெலியா | 134 1 001 9 1976795 |

மேலே கூறப்பட்ட வங்கிக் கணக்குகள் ஊடாக தமது ஒப்பந்தக் கடப்பாடுகளை கொடுப்பனவு செய்வதற்கு தவறுகின்ற எவரேனும் வாடிக்கையாளர், இலங்கை மத்திய வங்கியினால் த பினான்ஸ் கம்பனி பிஎல்சிக்கு நியமிக்கப்பட்ட முகாமைத்துவ குழாத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட உறுப்பினர்களால் அதிகாரமளிக்கப்பட்ட விசேட அடையாள அட்டையினை கொண்டுவருகின்ற த பினான்ஸ் கம்பனி பிஎல்சியின் பெயர்குறிக்கப்பட்ட ஊழியர்கள் ஊடாக தமது கடன் தொகைகளை தீர்ப்பனவுசெய்ய இயலுமாகவிருக்கும். மேலும், த பினான்ஸ் கம்பனி பிஎல்சிக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை மீளச் செலுத்தியமைக்காக அத்தகைய ஊழியர்களிடமிருந்து பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகின்றது. முகாமைத்துவக் குழாத்தின் உறுப்பினர்களிடமிருந்து ஊழியர்கள் பற்றிய உறுதிப்படுத்தலினை சரிபார்க்குமாறும் வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

மேலும், தமது உடன்படிக்கைகளுக்கமைவாக அவர்களது ஒப்பந்தக் கடப்பாடுகளை கொடுப்பனவு செய்வதற்கு தவறுகின்ற வாடிக்கையாளர்களுக்கெதிராக அவசியமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

| நிறுவனம் | நோக்கம் | தொலைபேசி இலக்கங்கள் | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | உரிமத்தினை இரத்துச் செய்தல் | 011 2477573<br>011 2477229<br>011 2477504 | snbfi_query@cbsl.lk |
| தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் | இலங்கை வைப்புக் காப்புறுத் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுக் கொடுப்பனவு | 011 2398788 | dred@cbsl.lk |
| இலங்கை மத்திய வங்கியினால் த பினான்ஸ் கம்பனி பிஎல்சிக்கு நியமிக்கப்பட்ட முகாமைத்துவ குழாத்தின் உறுப்பினர்கள் | அறவீட்டு அலுவலர்கள் பற்றிய விபரங்களைச் சரிபார்ப்பதற்கு | 077 6550045<br>076 2050360 | mtmjalaldeen123@gmail.com<br>nihalrodrigo17@gmail.com |
| த பினான்ஸ் கம்பனி பிஎல்சி | வைப்புக்கள் | 071 1455379 | info@thefinance.lk |
| | கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அடகு முற்பணங்கள் | 071 1455379 | |
| | கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் / குத்தகை மற்றும் ஏனைய வசதிகள் | 071 4086248 | |


**பணிப்பாளர் - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

☎ 0112477504 🖷 0112477738 @ dsnbfi@cbsl.lk